**திரு. S. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதி, கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சி, சிறப்புநிலைப் பேரூராட்சியாகத் தற்போது தரமுயர்த்தப்பட்டுள்ளது. இங்கு செயல்பட்டு வந்த நூலகக் கட்டடம் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் இருப்பதால், அருகிலுள்ள பெருந்துறை பேரூராட்சியில் கருமாண்டிசெல்லிப்பாளையம் நூலகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டடத்தை அகற்றி, அதே இடத்தில், மீண்டும் கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சியிலேயே இந்த நூலகக் கட்டடத்தை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நூலகர்கள் சார்பாக அது தொடர்பான கருத்துருக்கள் கேட்கப்பட்டு, அங்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள், எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன என்பனவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தேவைப்படும்பட்சத்தில், அதே இடத்தில் புதிதாக நூலகம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.

**110—**

### புத்தாக்கப் பயிற்சி

***4265—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் இராணுவத்தில் சேரும் இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க புத்தாக்கப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் இளைஞர்கள் இராணுவத்தில் சேரும் எண்ணிக்கையை அதிகரிக்க புத்தாக்கப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

**திரு. ரூபி ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தில் வட மாநில இளைஞர்களைப்போல தமிழக இளைஞர்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவதில்லை. குறிப்பாக, கடந்த 9 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஒன்றிய அரசின்* Agnipath *திட்டத்திலும், தமிழக இளைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை; வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. வட மாநிலங்களுக்கு இணையாக இல்லை. எனவே, தமிழகத்தின் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு, விகிதாச்சார அடிப்படையில், வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 3 இலட்சத்து 8 ஆயிரத்து 280 இராணுவ வீரர்கள் சேர்க்கையில், ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 435 பேர் வட இந்தியர்கள். அதாவது, 57 சதவிகிதம் வட இந்தியர்கள் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அதாவது, பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான், உத்தரகாண்ட், ஜம்மு காஷ்மீர் ஆகிய 6 வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் 57 சதவிகிதம் பேர் சேர்ந்திருக்கிறார்கள். 2019–2020 ஆம் ஆண்டு* data*–வின்படி ஹரியானாவின் மக்கள்தொகை இந்திய மக்கள்தொகையில் 2 சதவிகிதம் இருக்கிறது; அவர்களில் 6 சதவிகிதம் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இந்திய மக்கள்தொகையில் 1 சதவிகிதமான இமாச்சலப் பிரதேசத்தில், 7 சதவிகிதத்தினர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். இந்திய மக்கள் தொகையில் 2 சதவிகிதமான பஞ்சாப் மாநிலத்தில் 10 சதவிகிதத்தினர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். மொத்தத்தில் 5 சதவிகித மக்கள்தொகை கொண்ட அம்மாநிலங்களில், கிட்டத்தட்ட 23 சதவிகிதத்தினர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.*

முற்பகல் 11–25

அதேபோன்று, 2019–2020 ஆம் ஆண்டில் மட்டும், மொத்தம் 80 ஆயிரத்து ஐநூற்று எழுபத்து இரண்டு நபர்கள் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். Northern States–ல், உத்தரப் பிரதேச மாநிலத்தில் 8 ஆயிரத்து 425 நபர்களும், பஞ்சாப் மாநிலத்தில் 7 ஆயிரத்து 813 நபர்களும், இமாச்சலப் பிரதேசத்தில் 5 ஆயிரத்து 782 நபர்களும், ராஜஸ்தான் மாநிலத்தில் 6 ஆயிரத்து 882 நபர்களும், ஆக மொத்தத்தில் 2019–2020 ஆம் ஆண்டில் மட்டும் 58 சதவிகிதம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். நான் கேட்பது, தமிழகத்தில் இன்றைக்கு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ளன, மத்திய அரசும் சரியாக வழங்குவதில்லை, இராணுவத்திலும் விகிதாச்சார அடிப்படையில் புறக்கணிக்கப்படுவதாக நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ரூபி ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தால் இராணுவத்தில் ஆட்கள் சேர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் நாங்குநேரி தொகுதியானது, திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் Agnipath திட்டத்தின்கீழ், இராணுவத்தில் ஆட்சேர்ப்பு முறைக்குப் புதிய தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த இராணுவ ஆட்சேர்ப்பு முறை தேர்வானது, அந்தந்த மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டன. இந்த ஆட்சேர்ப்பு முறையில், முதலில் உடற்தகுதி தேர்வு, அதனைத் தொடர்ந்து மருத்துவத் தேர்வு, இறுதியாக எழுத்துத் தேர்வு என்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், தற்போதைய

*2023 ஏப்ரல் 5]*

*Agnipath திட்டத்தின்கீழ், இராணுவத்தில் ஆட்சேர்ப்பு முறைக்கு இணையதளம் மூலமாகத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அந்த தேர்வில் யார் தேர்ச்சி பெறுகிறார்களோ, அவர்களுக்கு உடற்தகுதித் தேர்வு, அதனைத் தொடர்ந்து மருத்துவத் தேர்வு என்ற புதிய வழிமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரது கேள்வி மிக, மிக முக்கியத்துவம் வாய்ந்தது. விகிதாச்சார அடிப்படையில், தமிழ்நாட்டிலிருந்து அதிக இளைஞர்களை இராணுவத்திற்கு அனுப்ப வேண்டும் என்கிற அடிப்படையில், இணையதளம் மூலமாக நடத்தப்படுகின்ற எழுத்துத் தேர்வில் தமிழகத்திலிருந்து அதிக அளவிலான இளைஞர்கள் பங்கேற்கின்ற வகையில், அதற்கான புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, அதிக அளவிலான இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கான உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், நீங்கள் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்ற காரணத்தினால் அதிக அளவிலான தரவுகளைக் கூறுகிறீர்கள். இரண்டாம் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

**திரு. ரூபி ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 58 ஆக இருந்தது; தற்போது 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோன்று இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கான வயது வரம்பை முன்பிருந்ததைவிட தற்போது இரண்டு ஆண்டுகள் உயர்த்தி வழங்க வேண்டும். இராணுவத்தினருக்கு மட்டுமல்லாது, தமிழக இளைஞர்களுக்கும், அரசுப் பணியில் சேருவதற்கான வயது வரம்பைக் கூட்டுவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 5*

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தில் சேர்பவர்களின் வயது வரம்பை உயர்த்தும் பொறுப்பு, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இருந்தாலும், வீரத்தின் விளை நிலமாம் தமிழ் மண்ணின் மைந்தர்கள், நாடு காக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்து, கொட்டும் மழையிலும், உறைய வைக்கும் குளிரிலும், தகிக்க வைக்கும் பாலைவனங்களிலும் அயராது பாடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான கடும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, வீரத்துடனும், விழிப்புணர்வுடனும் செயல்பட்டுவரும் இவ்வீரர்களின் விலைமதிப்பற்ற தியாகத்தினைப் போற்றிடும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் மறுவாழ்விற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் சுமார் 1 இலட்சத்து 86 ஆயிரம் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலன்களைப் பேணுகின்றவகையில், சுமார் 15 ஆயிரத்து 336 முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தினருக்கு, இந்த 2022–2023 ஆம் ஆண்டில் மட்டும் 39 கோடியே 50 இலட்சம் ரூபாய் அவர்களுக்கு நலத் திட்ட உதவிகளாக வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–30*

*மேலும், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் தங்கள் இன்னுயிர் நீத்த மற்றும் அதன்மூலம் மாற்றுத் திறனாளிகளாக ஆக்கப்பட்ட படைவீரர்களுக்கான கருணைத் தொகை வழங்கும் திட்டம் மிகவும் உன்னதமான திட்டமாகும். இந்தக் கருணைத் தொகை வழங்கும் திட்டம் 1971 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டு முதலாம் உலகப் போரில் வீர மரணமடைந்தோரின் வாரிசுதாரர்களுக்கு 20 இலட்சம் ரூபாயாக வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வரலாறு காணாத அளவில் 20 இலட்சம் ரூபாயை 40 இலட்சம் ரூபாயாக, இரு மடங்காக உயர்த்தி வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் இந்தத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இராணுவத்தினருக்கான அனைத்துத் திட்டங்களையும் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்*

*2023 ஏப்ரல் 5*]

*அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கு ஒன்றிய அரசால் ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன். உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)* Zero Hour*—தான் எடுத்துக்கொள்கிறேன்.*

*சிறப்புக் கவன ஈர்ப்பாக* delta *பகுதிகளில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கு ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர்* T.R.B. *ராஜா, திரு. கா. அண்ணாதுரை, முனைவர் கோவி. செழியன், திரு. துரை. சந்திரசேகரன், திரு. பூண்டி கே. கலைவாணன், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு.* S. *பழனி நாடார், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. அருள், திரு.* S. *சதாசிவம், திரு. ச. சிவகுமார், திரு. தி. வேல்முருகன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு.* S.S. *பாலாஜி, திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், திரு. வி.பி. நாகைமாலி, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எடப்பாடி* K. *பழனிசாமி அவர்கள், திரு. ஆ. அருண்மொழிதேவன், திரு.* M. *ராஜமுத்து, திரு.* K.A. *பாண்டியன், திரு. ஈ. பாலசுப்ரமணியன், திரு. வே. சம்பத்குமார், திரு. இ.மா. மான்ராஜ், திரு. அ. பண்ணாரி, திரு. ரா. மணி, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. இரா. காமராஜ், டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு.* K. *மாரிமுத்து,*